HGH® INDIA 2022
HOME DECOR ▪▪▪ GIFTS ▪▪▪ HOUSEWARE
December 13-16, 2022
Bombay Exhibition Center, Mumbai

செய்தி 2

A TEXZONE Event
www.hghindia.com

Where business feels at home!

# ஏற்றுமதியாளர்கள் வழங்கும் உலகளாவிய கலெக்சன்கள்

உயர்தரம், சர்வதேச நிறங்கள் மற்றும் வடிவமைப்புகள், உயர் செயல்திறன் போன்றவற்றை இந்திய நுகர்வோர்கள் வாங்கும் அனைத்து வீட்டு ஜவுளிகளிலும் எதிர்பார்க்க தொடங்கியுள்ளனர், விற்பனையாளர்களும் வாடிக்கையாளரின் மாறி வரும் இது போன்ற எதிர்பார்ப்புகாளை பூர்த்தி செய்ய வேண்டிய தேவை உருவாகியுள்ளது.

பத்தாண்டுகளில், நன்கு நிறுவப்பட்ட 300 ஏற்றுமதி நிறுவனங்கள் வெற்றிகரமாக HGH இந்தியா மூலம் இந்திய உள்நாட்டு சந்தையில் தடம் பதித்துள்ளன. இன்று அவர்கள் இந்திய ரீடெய்லர்கள் மற்றும் நுகர்வோரால் நன்கு அறியப்படும் மற்றும் அங்கீகரிக்கப்பட்ட பிராண்டுகளாக வலம் வருகின்றனர்.

பெட் ஷீட்கள், டவல்கள், டூயட்கள், கம்ஃபோர்ட்டர்கள், அலங்கார படுக்கைகள், சிறு மெத்தைகள், கோடைக்கால போர்வைகள், திரைச்சீலைகள், த்ரோவ்ஸ், குஷன் கவர்கள், டேபிள் & கிச்சன் லினன், பாத் மேட்ஸ் மற்றும் ரக்ஸ்,ஏரியா ரக்ஸ், டூரிகள், டோர் மேட்ஸ் மற்றும் பல்வேறு அலங்கார மேட்-அப்கள் போன்ற முன்னணி இந்திய ஏற்றுமதியாளர்களால் வழங்கப்படும் பல்வேறு வகையான சர்வதேச வீட்டு ஜவுளி தயாரிப்புகளை HGH இந்தியா அறிமுகப்படுத்தும்.

வரவிருக்கும் கண்காட்சியில், மாஸ்பார், புளுச்சி, மைக்ரோ காட்டன், கே.ஜி. டெனிம், டாக்டர் டவல்ஸ், போன்ஹூர், பானோ, லிபர்ட்டி, கலீன், பாலவிக்னா, கவுவின்ஸ் போன்ற முன்னணி வீட்டு ஜவுளிப் பிராண்டுகள் இந்த ஏற்றுமதியாளர்களால் காட்சிப்படுத்தப்படவுள்ளது. துருக்கி நாட்டை சேர்ந்த மைக்ரோஃபைபர்ஸ் போன்ற சர்வதேச பிராண்டுகளும் பங்கேற்கவுள்ளன.


என்ரியா


பனோ

அதுமட்டுமல்லாமல், அசதீப் பர்னிஷிங்ஸ், எலிகன்ட் வீவர்ஸ், தேவதாரா, லகாசா, பிக்ஷு ஃபேப்ரிக்ஸ், மார்வின் லெதர், ஹோம் ஃபேப்ரிக்ஸ், வலம் ஹோம், லாபம், கார்டினா மற்றும் ஹோம் ஸ்டோரி போன்ற வழக்கமான உள்நாட்டு தயாரிப்பாளர்களும் பெட்ஷீட்கள், டவல்கள், டெகரேட்டிவ் பொருட்கள் போன்றவற்றில் தங்கள் புதிய கலெக்சன்களை காட்சிப்படுத்தவுள்ளார்கள்.

இதேபோல், கைவினைப் பொருட்கள், அலங்காரப் பொருட்கள், வீட்டு ஃபர்னிச்சர், மெத்தைகள், தலையணைகள், ரக்ஸ் மற்றும் கார்ப்பெட்கள், ஸ்டெயின்லெஸ் ஸ்டீல் வீட்டுப் உபயோகபொருட்கள், சமையலறைப் பொருட்கள் மற்றும் சமையல் பாத்திரங்கள், பிளாஸ்டிக் மற்றும் பொதுவான வீட்டுப் பொருட்கள், மேஜை மேல் வைக்கும் பாத்திரங்கள் மற்றும் பிற வீட்டுப் பொருட்களுக்கான ஏற்றுமதியாளர்களும் இந்திய நுகர்வோர்களின் கவனத்தை ஈர்த்துள்ளனர், நாடு முழுவது இப்பொருட்களின் வணிக வாய்ப்புகள் பெரிதாகவும் லாபகரமாகவும் வளர்ந்து வருகின்றது. இந்த ஏற்றுமதியாளர்கள் மற்றும் இந்திய ரிடெய்லர்களுக்கு லாபகரமான சூழலாகவே இருக்கும், உலகத் தரம் வாய்ந்த தயாரிப்புகள் மற்றும் வடிவமைப்புகளை பெற இறக்குமதியினை மட்டுமே சார்ந்திருப்பதைக் குறைக்க முடியும்.

வீட்டு ஜவுளி, வீட்டு அலங்காரம், வீட்டுத் ஃபர்னிச்சர், வீட்டுப் பொருட்கள் மற்றும் பரிசுப் பொருட்கள் ஆகியவற்றின் உள்நாட்டு சந்தை வளர்ச்சியை எளிதாக்குவதற்கு HGH இந்தியா தயாராகி வருகிறது. 25,000 க்கும் மேற்பட்ட ரீடெய்லர்கள் ஏற்கனவே முன் பதிவு செய்துள்ள நிலையில், டிசம்பர் 13-16, 2022 வரை நடைபெறும் நான்கு நாள் வர்த்தகக் கண்காட்சி, வரவிருக்கும் ஸ்பிரிங்/கோடை 2023 ரீடெய்ல் சீசனுக்கான வணிக நடவடிக்கைகளை மும்பைக்குக் கொண்டுவரும்.

# பல சிறப்புக் குழுக்கள் பங்கேற்கின்றன

இந்திய ரீடெய்லர்கள், விநியோகஸ்தர்கள், இன்டீரியர் டிசைனர்கள் மற்றும் நிறுவன ரீதியாக வாங்குபவர்களுக்கு மிகப்பெரிய வாய்ப்புகளை வழங்குவதோடு, பல முன்னணி தேசிய மற்றும் சர்வதேச குழுக்கள் பங்கு கொள்ளும் வகையில் சர்வதேச மற்றும் இந்திய வர்த்தக மேம்பாட்டு ஏஜென்சி ஏற்பாடு செய்துள்ளது. HGH இந்தியா வாடிக்கையாளர்களை ஆராயப்படாத படைப்பாற்றல், தயாரிப்பு கண்டுபிடிப்புகள், வடிவமைப்பாளர்கள் மற்றும் கைவினை கலைஞர்களின் வீட்டு ஜவுளி, வீட்டு அலங்காரம், வீட்டுப் பொருட்கள், வீட்டு சாமான்கள் மற்றும் பரிசுகள் போன்ற துறைகளுடன் இணைக்கும்.


EPCH பெவிலியன்

இத்தாலிய நேஷனல் பெவிலியனை முன்னிறுத்தும் இத்தாலிய வர்த்தக நிறுவனம், வீட்டு ஃபர்னிச்சர்கள், அலங்கார கண்ணாடிப் பொருட்கள், பீங்கான் மற்றும் கலைப்பொருட்கள், அலங்கார பாகங்கள், சுவர் அலங்காரம், பீங்கான் மற்றும் இன்டீரியர் டிசைனர் கான்செப்ட்ஸ் போன்ற வகைகளில் 10 நன்கு நிறுவப்பட்ட வடிவமைப்பாளர்கள் மற்றும் உற்பத்தியாளர்களை காட்சிப்படுத்தவிருக்கிறது.

கைவினைப்பொருட்களுக்கான ஏற்றுமதி ஊக்குவிப்பு கவுன்சில் (EPCH) டெல்லி, மொராதாபாத், ஆக்ரா, சஹாரன்பூர், குர்ஜா, ஜோத்பூர் & ஜெய்ப்பூர் போன்ற மையங்களில் இருந்து 20 கண்காட்சியாளர்களைக் கொண்ட குழுவை ஏற்பாடு செய்துள்ளது, அவர்களில் பலர் HGH இந்தியாவில் முதல் முறையாக கண்காட்சியாளர்களாக பங்கேற்விருக்கிறார்கள். நார்த் ஈஸ்ட் சென்டர் ஃபார் டெக்னாலஜி & ரிசர்ச் (NECTAR) மூங்கில், கரும்பு, மரம், பட்டு, இயற்கை மணிகள் மற்றும் கற்கள் போன்ற பொருட்களில் இந்தியாவின் வடகிழக்கு பகுதியில் இருந்து கைவினைப் பொருட்களில் பல்வேறு வகைகளை காடசிப்படுத்தவுள்ளனர். தேசிய வடிவமைப்பு மையம், டெல்லி, இந்தியா முழுவதும் உள்ள இந்திய கைவினை கலைஞர்களின் கைவண்ணத்தில் உருவாகும் பல்வேறு கைவினை பொருட்களின் நவீனத்துவத்துடன் அனைவரையும் இணைக்கவுள்ளது. இந்தியன் இன்ஸ்டிடியூட் ஆஃப் கார்பெட் டெக்னாலஜி, பதோஹி, வாரணாசி, ஆக்ரா மற்றும் ஜெய்ப்பூர் போன்ற மையங்களில் இருந்து நேர்த்தியாக கையால் செய்யப்பட்ட கார்ப்பெட் உற்பத்தியாளர்களை கண்காட்சியில் பங்கேற்க வரவேற்றுள்ளனர். தேசிய கைத்தறி மேம்பாட்டுக் கழகம் (NHDC) கைத்தறி நெசவாளர்கள் மற்றும் நாட்டின் பல்வேறு பகுதிகளில் இருந்து குஷன் கவர்கள், படுக்கை உறைகள், திரைச்சீலைகள், மேஜை மற்றும் சமையலறை லினென் போன்ற கையால் நெய்யப்பட்ட வீட்டு ஜவுளி உற்பத்தியாளர்களுக்கான ஆதரவை வழங்கவுள்ளது.

HGH இந்தியாவின் கிட்ஸ் ஹோம் பிரிவில் முதன்முறையாக கையால் செய்யப்பட்ட பொம்மைகளை காட்சிப்படுத்த EPCH ஏற்பாடு செய்துள்ளது.

# HGH இந்தியாவின் கண்ணோட்டங்கள்

இந்திய சந்தையில் அதிக திறன் கொண்ட வணிகங்களை ஊக்குவித்து மேம்படுத்தும் விதமாக HGH இந்தியா செயலாற்றி வருகிறது. கண்காட்சியாளர்கள் மற்றும் வர்த்தக கொள்முதலாளர்களின் நலனுக்காக இந்த முயற்சிகளைத் தொடர்வதன் மூலம், HGH இந்தியாவின் 12வது பதிப்பு, பரந்த அளவில் வணிகத் திறனைக் கொண்ட சில குறிப்பிட்ட பிரிவுகள் மீது கவனம் செலுத்தவுள்ளது. வேர்ல்டு ஆஃப் ஸ்லீப், வீட்டு பர்னிச்சர், ஸ்மார்ட் கிச்சன், சுவர் மற்றும் ஜன்னல்கள் மற்றும் கிட்ஸ் ஹோம்.

World of Sleep

a joint initiative by HGH | ISPF

HGH இந்தியாவின் கடந்த இரண்டு பதிப்புகளில் அமைத்த வேர்ல்ட் ஆஃப் ஸ்லீப் பெவிலியன் அரங்கம் பார்வையாளர்களின் கவனத்தை பெரிதளவில் கவர்ந்துள்ளது. ஸ்லீப் இண்டஸ்ட்ரியின் சமீபத்திய டிரெண்ட்கள் மற்றும் புதுமைகளைக் காணும் வாய்ப்பாக பாரட்டைப் பெற்றுள்ளது.

HGH இந்தியாவின் வரவிருக்கும் 12வது பதிப்பில் ஸ்லீப்வெல், குர்ல்-ஆன், ஸ்ப்ரிங்க்ஃபிட், சென்ச்சுரி, செர்ட்டா, சிமான், ஸ்ப்ரிங் ஏர், ஸ்லீப்மேக்ஸ், ரிபோஸ், லிப்ரா போன்ற முன்னணி பிராண்டுகள் வேர்ல்டு ஆஃப் ஸ்லீப் அரங்கத்தை அலங்கரிக்கவுள்ளனர். மூன்றாவது முறையாக, வேர்ல்ட் ஆஃப் ஸ்லீப் பார்வையாளர்களுக்கு ஆரோக்கியமான தூக்கத்தை பெறுவதற்கான தொழில்நுட்பம் சார்ந்த புதுமைகள் பற்றிய நுண்ணறிவுகளை வழங்கும். இது தவிர, காம்ஃபை, அமௌரா, ஆர்டிபி ஃபோம், ஃபேமஸ் ஃபோம் போன்ற பல புதிய பிராண்டுகள் வரவிருக்கின்றன மற்றும் உற்பத்தியாளர்கள் தங்கள் தனிப்பட்ட USPகளை முன்னிருத்தவுள்ளனர்.



HGH இந்தியா மற்றும் இந்திய ஸ்லீப் தயாரிப்புகள் கூட்டமைப்பு (ISPF), வேர்ல்ட் ஆஃப் ஸ்லீப் ஆகியோரின் கூட்டு முயற்சி, பல்வேறு வகைகளில் தூக்க தயாரிப்புகளில் உள்ள புதுமைகள் மற்றும் தொழில்நுட்ப போக்குகளை பார்வையாளர்கள் புரிந்துகொள்ள உதவும்.

நல்ல உறக்கம் நல்ல ஆரோக்கியத்திற்கு வழிவகுக்கும் என்பது உலகளவில் ஏற்றுக்கொள்ளப்பட்ட உண்மை. மெத்தைகள், தலையணைகள், போர்வைகள் மற்றும் கம்ஃபோர்ட்டர் போன்ற தூக்க ப்ராடக்ட் புதுமைகளைப் பற்றி HGH இந்தியாவில் உள்ள வேர்ல்ட் ஆஃப் ஸ்லீப் பெவிலியன், ரீடெய்ல்ர்கள் மற்றும் சேனல் பார்ட்னர்களுக்கு பயனுள்ள தகவல்களை வழங்கும். இந்த ஸ்லீப் ப்ராடக்ட்களின் நல்ல தரத்துடன், நல்ல தரமான தூக்கத்தை உறுதி செய்வதில் மேட்ரஸ் ப்ரொடெக்டார்ஸ், ஸ்லீப்பிங் பேக்ஸ், ஸ்லீப்பிங் பாட்ஸ், ஸ்லீப்பிங் கேஜெட்டுகள் மற்றும் சரியான இசை, ஒளி, அறை வெப்பநிலை, வண்ணங்கள், நறுமணம் மற்றும் வாசனை திரவியங்கள், காற்று சுத்திகரிப்பு போன்றவற்றின் முக்கியத்துவத்தையும் பிராண்டுகள் மற்றும் உற்பத்தியாளர்கள் கண்டுபிடித்துள்ளனர்.

HGH இந்தியாவில் உள்ள வேர்ல்ட் ஆஃப் ஸ்லீப் பெவிலியன், ரீடெய்லர்கள் மற்றும் வர்த்தக பார்வையாளர்களுக்கு ஸ்லீப் ப்ராடக்ட்களில் வரவிருக்கும் டிரெண்டுகளை பற்றி தெரியப்படுத்தி, தனிப்பட்ட தேவைகளுக்கு மிகவும் பொருத்தமான ஸ்லீப்பிங் சொல்யூஷன்ஸ் குறித்து நுகர்வோருக்கு சிறந்த தகவலை வழங்க உதவும்.

வேர்ல்ட் ஆஃப் ஸ்லீப் பெவிலியனில், வல்லுநர்கள் நல்ல தரமான தூக்கம் மற்றும் சிறந்த ஆரோக்கியம், தூக்க சுகாதாரம், கம்ஃபோர்ட், மன அழுத்தத்தினை குறைத்தல் மற்றும் உற்பத்தித்திறன் போன்றவற்றில் நிகழ்ந்து வரும் ஆராய்ச்சி கண்டுபிடிப்புகளை பற்றியும் பகிர்ந்து கொள்வார்கள். நுகர்வோர்கள் இன்று தங்கள் தனிப்பட்ட தேவைகளுக்காக ஸ்லீப்பிங் சொல்யூஷன்ஸை தேடுகின்றனர். ரிடெய்லர்களும் இத்துறையில் வேகத்தைத் தொடர்ந்து நுகர்வோரின் எதிர்பார்ப்பை பூர்த்தி வேண்டும்.

வேர்ல்ட் ஆஃப் ஸ்லீப் அரங்கம் ரீடெய்லர்கள் தங்கள் தயாரிப்புகளின் தனித்துவமான அம்சங்களைப் புரிந்துகொள்வதற்கு பிராண்டுகள் மற்றும் உற்பத்தியாளர்களுடன் நேரடியாக இணைவதற்கான ஒரு தனித்துவமான வாய்ப்பாகும்.

ஒவ்வொரு செசனிற்கும் 20 நிமிடம் என்ற இடைவெளியில் வல்லுநர் குழு இலவச ரீடெய்லர் கருத்தரங்கு பயிற்சிகளை இலவசமாக வழங்கவுள்ளது. இருக்கைகள் குறைவாக இருப்பதால், HGH இந்தியாவிற்கான பதிவுசெய்யப்பட்ட அனைத்து பார்வையாளர்களும் இந்த கருத்தரங்குகளுக்கு பதிவு செய்யலாம். நீங்கள் ஏற்கனவே பார்வையாளராக பதிவு செய்திருந்தால், கருத்தரங்கிற்கு பதிவு செய்ய கீழே உள்ள இணைப்பைக் கிளிக் செய்யவும்.

https://docs.google.com/forms/d/e/1FAIpQLSdM_7kzKDRJWhI93_EtCoGdECbyeqJ9syWyyLERD0LI9Rkabw/viewform

நீங்கள் இன்னும் பார்வையாளராகப் பதிவு செய்யவில்லை என்றால், தயவுசெய்து இங்கே க்ளிக் செய்யவும் https://www.hghindia.com/eng/otp-registration/ மற்றும் 5 டிசம்பர் 2022க்கு முன் பதிவு செய்து, ரூ. 1,000/- ஸ்பாட் பதிவு கட்டணத்தை மிச்சப்படுத்துங்கள். இதற்குப் பிறகு மேலே உள்ள இணைப்பில் நீங்கள் பயிற்சி செசனிற்கு பதிவு செய்யலாம்.

வரவிருக்கும் கண்காட்சியில், HGH இந்தியா வீட்டுத் ஃபர்னிச்சர் பிரிவில் அதிக அளவிலான புதிய பல அரங்குகள் அமையவுள்ளன. ஹோம் ஃபர்னிச்சர் பிரிவில்

Home Furniture

an initiative by HGH India

வரவிருக்கும் டிரெண்ட்கள் அனைத்தும் புதிய ஹோம் ஃபர்னிச்சர் பெவிலியனில் கண்காட்சிப்படுத்தப்படவுள்ளது.

ஹால் 1 இல் உள்ள இத்தாலிய நேஷனல் பெவிலியனில் உள்ள 10 இத்தாலிய கண்காட்சியாளர்களில், நான்கு அரங்கங்கள், நாற்காலிகள், சோஃபாக்கள் & அலமாரிகள், மரத்தாலான ஃபர்னிச்சர் மற்றும் கஸ்டமைஸ்டு ஃபர்னிச்சர் போன்றவற்றிற்காக அமைக்கப்படவுள்ளன.

நேரத்தைக் மிச்சப்படுத்தும் வகையில் நுகர்வோர்கள் ஒரே இடத்தில் முழுமையான வீட்டு அலங்காரத்திற்கான தீர்வுகளைத் தேடுவதால், வீட்டுப் பிரிவுகளில் உள்ள ரீடெய்லர்கள் தங்கள் கடைகளில் அனைத்து வீட்டு ஃபர்னிச்சர்களையும் சேர்க்க ஆர்வமாக உள்ளனர். பர்னிஷிங், வீட்டு அலங்கார பொருட்கள் மற்றும் ஃபர்னிச்சர் விற்பனையாளர்கள், இன்டீரியர் டிசைனர்கள், கட்டிடக் கலைஞர்கள், விநியோகஸ்தர்கள் மற்றும் நிறுவன ஃபிரான்ஷைஸ் எடுக்க விரும்பும் உரிமையாளர்கள் இந்திய மற்றும் சர்வதேச பிராண்டுகள் மற்றும் உற்பத்தியாளர்களிடமிருந்து நவீன, பாரம்பரிய மற்றும் அழகிய ஃபர்னிச்சர்களை பலவற்றை ஆராயந்து தேர்ந்தெடுக்கலாம்.

வீட்டு ஃபர்னிச்சர் என்பதில் லிவிங் ரூம், டைனிங் ரூம், பெட்ரூம், கிச்சன், ஸ்டடி ரூம், பாத்ரூம், ஹோம் ஆபீஸ் ஃபர்னிச்சர்கள், அழகுக்கான ஃபர்னிச்சர்கள், வெளிப்புற மற்றும் ஓய்வுக்கான ஃபர்னிச்சர்கள் ஆகியவை அடங்கும் இதில் சோஃபாக்கள், ரீக்லைனர்கள், டைனிங் டேபிள்கள், பெட்ஸ், அலமாரிகள், காபி டேபிள்கள், கன்சோல்கள், அலமாரிகள், சைட் மேசைகள், வீட்டு அலுவலக மேசைகள், நாற்காலிகள், பீன் பேக்குகள் & பஃப்கள், ராக்கிங் நாற்காலிகள், ஸ்டூல்கள், ஊஞ்சல்கள், குழந்தைகளுக்கான ஃபர்னிச்சர்கள், தோட்ட ஃபர்னிச்சர்கள், வெளிப்புற ஃபர்னிச்சர்கள், ரேக்குகள் & தள்ளுவண்டிகள், பார் கேபினெட்கள் & ஸ்டோரேஜ் செஸ்ட்கள், டிரஸ்ஸர்கள் & கண்ணாடிகள், புத்தக அலமாரிகள் & பத்திரிகை ஹோல்டர்கள், ஷோகேஸ்கள் மற்றும் டிஸ்ப்ளே யூனிட்களும் அடங்கும்.



தொழில்நுட்ப முன்னேற்றங்கள் மரம், மூங்கில், கரும்பு, பிளாஸ்டிக், செம்பு, இரும்பு, எஃகு, பித்தளை, கண்ணாடி, கல், அக்ரிலிக், மறுசுழற்சி செய்யப்பட்ட பொருட்கள் போன்ற பொருட்களில் அதிநவீன மரச்சாமான்களை உருவாக்க வழிவகுத்துள்ளது.

அதிகரித்து வரும் நகரமயமாக்கல், சிறிய வீடுகள் மற்றும் வாடகை குடியிருப்புகள் ஆகியவை இந்திய நுகர்வோரின் ஃபர்னிச்சர் வாங்கும் முறையில் பல தாக்கங்களை ஏற்படுத்தியுள்ளன. இன்று மக்கள் தங்கள் வீடுகளின் தோற்றத்தை அதிக ஃப்ரீக்வொன்ஸியில், குறைந்த செலவில் புதுப்பிக்க விரும்புகிறார்கள்.

இன்று நுகர்வோர்கள் ஒன்றுக்கொன்று ஒருங்கிணைக்க கூடிய ரெடிமேட் மரச்சாமான்கள் மற்றும் சாஃப்ட் ஃபர்னிஷிங்குகளை விரும்புகிறார்கள், . பெருந்தொற்று காலத்திற்கு பின்னர், ஹோம்-ஆபீஸ் மற்றும் இடத்தை சேமிக்கும் ஃபர்னிச்சர்களுக்கான தேவை அதிகரித்து வருகிறது.

நேரில் சென்று பொருட்களை வாங்கும் பொதுவான ஃபர்னிச்சர் கடைகளை தாண்டி முழுமையான ஹோம் ஸ்டோர்ஸ், பர்னிஷிங் கடைகள், வீட்டு அலங்கார பொருட்கள் கடைகள் மற்றும் ஆன்லைன் ரீடெய்லர்கள் போன்றோர் ஃபர்னிச்சர் வாங்குவதற்கான புதிய வழிகளாக மாறி வருகின்றனர்.

HGH இந்தியாவின் இந்தப் பதிப்பில் சமையலறை சாதனங்கள் அரங்கம் அதிக முக்கியத்துவம் பெறவுள்ளது. வொண்டர்செஃப், க்ளென், ஹாக்கின்ஸ், யு-குக். யுனைடெட் எக்டா, சஞ்சீவ் கபூர், ரெனா, ஃபிஸ்கர்ஸ், நொல்டா, அவ்கெ-நோக்ஸ், விகாஸ், பிரில்லியன்ட், ஶ்ரீ & ஷாம், ரோகா போன்ற சந்தையில் முன்னணியில் இருக்கும்

## ஹவுஸ்வேர் | ஸ்டோரேஜ் | டேபிள்வேர் | குக்வேர் | கிச்சன் உபகரணங்கள்

Smart Kitchen
an initiative by HGH India

நிறுவனங்கள் தங்கள் கண்டுபிடிப்புகளை சமையல் மற்றும் சமையல் சார்ந்த பிரிவுகளின் கீழ் மேம்படுத்தப்பட்ட வடிவமைப்புகள், சிறந்த செயல்பாடுகள் மற்றும் பலவற்றுடன் அறிமுகப்படுத்துவார்கள். பார்வையாளர்கள் தங்கள் தயாரிப்புகளின் முழுமையான வரம்பைப் புரிந்துகொள்ளவும் பார்க்கவும் முடியும்.

இந்திய குடும்பங்களில் ஸ்மார்ட் கிச்சன்கள் யதார்த்தமாகி வருகின்றன. இன்றைய மாடுலர் கிச்சன்கள் ஸ்மார்ட் சாதனங்கள், கேஜெட்டுகள் மற்றும் வாய்ஸ் அசிஸ்டெண்ட் மூலம் மிகவும் புத்திசாலித்தனமாக செயல்படத் தொடங்கியுள்ளன. சமையல் பாத்திரங்கள் மற்றும் கிச்சன்வேர் உற்பத்தியாளர்களும் சிறந்த தயாரிப்புகளை அறிமுகப்படுத்த தொடங்கியுள்ளனர். HGH இந்தியா 2022 மாடுலர் கிச்சன்கள், சமையலறை உபகரணங்கள், சமையல் குக்வேர் மற்றும் கிச்சன் வேர் பிரிவுகளில் சமையலுக்குகந்த வேகமான, ஆரோக்கியமான, சுற்றுச்சூழலுக்கு ஏற்ற பொருட்களின் மீது கவனம் செலுத்தவுள்ளது

ஸ்மார்ட் கிச்சன் பெவிலியன் ரீடெய்லர்கள், விநியோகஸ்தர்கள் மற்றும் டிரேட் பையர்கள் இந்தியா மற்றும் பிற நாடுகளில் இருந்து பிராண்டுகள் மற்றும் உற்பத்தியாளர்களால் அறிமுகப்படுத்தப்படும் புதுமைகளை மதிப்பிட்டு வாங்க உதவும். மாடுலர் சமையலறைகள், குக்கிங், சமையல் பாத்திரங்கள், சமையலறை உபகரணங்கள் மற்றும் சமையலறை கருவிகள் ஆகியவற்றில் வரவிருக்கும் டிரெண்டுகள் மற்றும் தயாரிப்பு கண்டுபிடிப்புகளைப் புரிந்துகொள்ள இது அவர்களுக்கு உதவும்.

வெட்டுவது முதல் அரைப்பது வரை, சுத்தம் செய்வது முதல் உணவு தயாரிப்பது வரை, உணவு பதப்படுத்துதல், பேக்கிங், வேகவைத்தல் அல்லது வதக்குதல், வேகவைத்தல் முதல்



வறுத்தல் வரை, டோஸ்டிங் முதல் ரோஸ்டிங் வரை, ஐசிங் முதல் அலங்கரித்தல் வரை... அனைத்து சமையலறை நடவடிக்கைகளுக்கு தேவையான பொருட்கள், செயல்முறைகள், வசதி மற்றும் பாதுகாப்பு போன்றவை வளர்ச்சி அடைந்து வருகின்றன. ஆட்டோமேஷன், ஊட்டச்சத்து, சுகாதாரம், ஆரோக்கியம் மற்றும் சுற்றுச்சூழல் ஆகியவை சமையலில் புதிய முக்கிய வார்த்தைகளாகி வருகின்றன.

உணவு சேமிப்பு, தயாரித்தல், பதப்படுத்துதல் மற்றும் பரிமாறுதல் ஆகியவற்றின் அனைத்து நிலைகளிலும் சுத்தம் மற்றும் சுகாதாரப் பாதுகாப்பு ஆகியவை புதுமைகளை உந்தித் தள்ளும் புதிய தேவைகளாக உள்ளது.

HGH இந்தியா 2022 இல், ஸ்மார்ட் கிச்சனுக்கான சிறப்பு பெவிலியன் ரீடெய்லர்கள் மற்றும் வர்த்தக பார்வையாளர்களுக்கு நடைமுறையில் உள்ள புதிய டிரெண்ட்களை தெரியப்படுத்தி புதுமையினை நோக்கி வரவேற்பளிக்க உள்ளது.

நுகர்வோர் தங்கள் வீடுகளுக்குள் அதிக ஸ்டைலான வசதிகளை தேர்வு செய்வதால், அவர்கள் தங்கள் சுவர்கள் மற்றும் ஜன்னல்களில் வீட்டு செயல்பாடுகளோடு சேர்ந்த அழகினை இணைக்க புதுமையான பொருட்கள் மற்றும் தொழில்நுட்பங்களை நாடுகிறார்கள். எளிமையான வால்பேப்பர்கள், பிளைண்ட் கள் மற்றும் திரைச்சீலைகள் ஆகியவற்றிலிருந்து,

Walls & Windows
an initiative by HGH India

தற்போதைய கவனம் ஆட்டோமேஷன், மேம்பட்ட சூரிய பாதுகாப்பு பொருட்கள், தனிப்பயனாக்கப்பட்ட வடிவமைப்புகள் மற்றும் ஒருவரின் ரசனை மற்றும் ஆளுமையின் வெளிப்பாட்டிற்கேற்ற தயாரிப்புகளை நோக்கி சென்று வருகிறது.

வால்பேப்பர்கள், பிளைண்ட்கள், திரைச்சீலைகள், வால் ஃபினிஷ்கள் மற்றும் ஜன்னல் ஆட்டோமேஷன் ஆகியவை இந்தியாவில் வேகமாக வளர்ந்து வரும் பிரிவுகளாகும். இந்திய பர்னிஷிங் சந்தையில் பழமையான பிரிவுகளில் ஒன்றாக இப்பிரிவு இருப்பதால், நவீன கால வடிவமைப்புகள், தொழில்நுட்பம் மற்றும் ஃபங்க்ஸ்னல் ஹாடுவேர்கள் மூலம் சுவர்கள் & ஜன்னல்களுக்கான தயாரிப்புகள் மறுவடிவமைக்கப்பட வேண்டியுள்ளது. வால்பேப்பர்களிலும் கூட டிஜிட்டல் பிரிண்டிங் மற்றும் சிறந்த வடிவமைப்புகளுடன் மேம்படுத்தப்பட பொருளில் வால்பேப்பர் அச்சடித்தல் போன்றவை மேற்கொள்ளப்பட வேண்டும்.



அது எகனாமி, பிரீமியம் மற்றும் லக்சுரி என எதுவாக இருந்தாலும்- அனைத்து பிரிவுகளும் சிறந்த செயல்திறன் மற்றும் அலங்கார யோசனைகளுக்கான புதிய பொருட்களின் வருகையை வரவேற்று வருகின்றன. வால்பேப்பர்கள், பிளைண்ட்கள், திரைச்சீலைகள் மற்றும் விண்டோ போன்ற தயாரிப்புகளில் ரீடெய்லர்கள் மற்றும் விநியோகஸ்தர்களுக்கான களத்தையே இவை மாற்றி அமைக்கும் வகையில் முன்னேறி வருகின்றன.

சுவர்கள் மற்றும் ஜன்னல்கள் அரங்குகள் இந்திய கண்டுபிடிப்புகள் மற்றும் உலகளாவிய முன்னேற்றங்களை முன்னிலைப்படுத்தும்.

மைக்ரோஃபைபர், அசதீப், வீட்டுத் துணிகள், வியண்டோ, வலம் ஃபேப்ரிக்ஸ், வலம் வீட்டு அலங்காரம் (கர்டெயின்ஸ் & கர்டெயின் ஃபேப்ரிக்ஸ்) வியன்டோ, நோவா, ஜி.டி. குப்தா, சிப்கோ, விஷன் பிளைண்ட்ஸ், இன்டிமா டிகோர், ஓமிக்ரான் ட்ரையோனிக்ஸ், ஃப்ளோவின் (பிளைண்ட்ஸ்), மார்ஷல், டி-வால், முன்ஷி, எஸ்.சி. ஷெத், எக்சிமஸ் (வால்பேப்பர்), கோஹினூர், டால்பின், 567, ஆர்.டி. இன்டர்நேஷனல், விர்டி, ஹெவா (கர்டன் ராட்ஸ் & பிளைண்ட் பாகங்கள்) மற்றும் பல பிராண்டுகள் வால்ஸ் & விண்டோஸ் பிரிவில் அரங்கம் அமைக்கவுள்ளன

Kids' Home
an initiative by HGH India

**இளைய இந்தியப் பெற்றோர்கள் தங்கள் குழந்தைகளுக்கான ஷாப்பிங் பழக்கவழக்கங்களை மாற்றிக்கொண்டிருப்பதால், இந்தப் பிரிவில் உள்ள பிராண்டுகள் மற்றும் உற்பத்தியாளர்கள் தங்கள் தயாரிப்புகளை குழந்தைகள் அல்லது டாய் ஸ்டோர்களையும் தாண்டி தங்கள் ரீடெய்ல் உற்பத்தியினை கொண்டு செல்ல வேண்டியுள்ளது.**

இந்தியாவில் குழந்தைகளுக்கான ஹோம் மார்க்கெட் வளர்ந்து வருவதால், பெற்றோர்கள் சிறந்த தரமான, குழந்தைகளுக்கு ஏற்ற தயாரிப்புகளைத் தேடுவதால், இந்தப் பிரிவு புதிய வாய்ப்புகளுக்கான கதவுகளைத் திறந்து வருகிறது.

HGH இந்தியா 2022, பெட் மற்றும் பாத், ஃபர்னிச்சர்கள், டெகரேஷன், ஃப்லோரிங், டாய்ஸ், தள்ளுவண்டிகள், ஹாபிஸ், ஹோம் ஆக்டிவிட்டீஸ், அவுட்டோர், ஸ்போர்ட்ஸ் & அட்வென்ச்சர், பாத்ரூம் பொருட்கள், வீட்டுப் பொருட்கள், ஆரோக்கியம் மற்றும் சுகாதாரம் மற்றும் பலவற்றில் குழந்தைகள் மற்றும் குழந்தைகளுக்கான வீட்டுப் பொருட்களுக்கான சிறப்புப் பிரிவை அறிமுகப்படுத்தவுள்ளது.

இந்த பிரிவில் புதுமையான, நன்கு வடிவமைக்கப்பட்ட மற்றும் நல்ல தரமான தயாரிப்புகளுக்கான தேவை இந்தியாவில் ஆண்டுக்கு 15% அதிகரித்து வருகிறது. ஷாப்பிங் பழக்கவழக்கங்களும் மாற்றத்திற்கு உட்பட்டுள்ளன, நுகர்வோர் வசதிக்காகவும் நேரத்தை மிச்சப்படுத்துவதற்காகவும் தங்கள் வழக்கமான வீட்டு பர்சேஸ்களுடன் குழந்தைகளுக்கான பொருட்களை வாங்க விரும்புகிறார்கள். ஸ்பெஷலைஸ்டு கிட்ஸ் கடைகளைத் தவிர, வழக்கமான வீட்டு ஜவுளிகள், ஃபர்னிச்சர்கள், ஹவுஸ்வேர் ரீடெய்லர்கள் மற்றும் பெரிய ஃபார்மேட் ஸ்டோர்கள் போன்ற பெரும்பாலோர் ஏஎஏ இந்தியாவில் வழக்கமான பார்வையாளர்களாக இருக்கின்றனர். இவர்களில் பலர் கிட்ஸ் பிரிவில் பல புதிய அரங்குகளை அமைக்கவுள்ளனர்

குழந்தைகள் தற்காலத்தில் கேஜெட்கள் சார்ந்த வாழ்க்கை முறையுடன் வீட்டில் அதிக நேரத்தை செலவிடுவதால், தரமான தூக்கம், விளையாட்டு, படிப்பு, வசதி, சுகாதாரம் மற்றும் பாதுகாப்பு போன்ற தேவைகளுக்கு ஏற்ப வாடிக்கையாளர்கள் தங்கள் குழந்தைகளை வாழ வைக்க விரும்புகிறார்கள்.

குழந்தைகளுக்கான போர்வைகள், குழந்தைகளுக்கான பெட்கள், துண்டுகள் மற்றும் குளியல் பொருட்கள், குழந்தைகளுக்கான மெத்தைகள் & தலையணைகள், குழந்தைகளுக்கான வீட்டு உபயோகப் பொருட்கள், தள்ளுவண்டிகள் மற்றும் வாக்கர்ஸ், குழந்தைகளுக்கான ஃபர்னிஷிங்குகள், கட்லரி மற்றும் மேஜைப் பாத்திரங்கள், தண்ணீர் பாட்டில்கள், கிட்ஸ் ஸ்டோரேஜ், சாஃப்ட் டாய்ஸ், தொழில்நுட்ப மற்றும் ஆக்ஷன் டாய்ஸ், கற்றல் நோக்க பொம்மைகள், குழந்தைகளுக்கான சிறு விளையாட்டு பொருட்கள், பள்ளிகளுக்கான உபகரணங்கள் & எழுது பொருட்கள், விளையாட்டு, ஓய்வு &



வெளிப்புற உபகரணங்கள், மகப்பேறு பொருட்கள், குழந்தை பரிசு பெட்டிகள், பார்ட்டிகள் & கொண்டாட்ட பொருட்கள், பண்டிகை பொருட்கள், செலவழியக் கூடிய பொருட்கள், அலங்கார பொருட்கள் போன்ற பலதரப்பட்ட பொருட்கள் காட்சிப்படுத்தப்படவுள்ளன.

புளூச்சி மிகவும் ஆக்கப்பூர்வமாக பின்னல் செய்யப்பட்ட சாஃப்ட் டாய்ஸ்கள், குழந்தைகளுக்கான படுக்கைகள், குழந்தைகளுக்கான துண்டுகள், ஆக்ஸசரீஸ்கள், கம்ஃபோர்ட்டர்கள், பரிசுப் பெட்டிகள் போன்றவற்றை காட்சிப்படுத்தவுள்ளது. டிஸ்னி/மார்வெல்/ ஸ்டார்வார்ஸ் உரிமம் பெற்ற குழந்தைகள் மற்றும் குழந்தைகளுக்கான தயாரிப்புகளையும் காட்சிப்படுத்தவுள்ளார்கள். குழந்தைகளுக்கான பெட் லினென், வடிவமைக்கப்பட்ட மெத்தைகள், ஷவர் கர்டெயின்ஸ், தலையணைகள், க்யுல்ட்ஸ் போன்றவையும் ஹேப்பி ஹோம் லினன்களால் காட்சிப்படுத்தப்படும். செஞ்சுரி மெத்தைகள் பிரத்யேக குழந்தைகள் மெத்தை கலெக்ஷனை காட்சிப்படுத்தவுள்ளனர். பாநீயூர் மற்றும் டாக்டர் டவல்ஸ் பல்வேறு கிட்ஸ் டவல்களை அறிமுகப்படுத்தவுள்ளது. இந்தியாவில் சிறந்த டவல் தயாரிப்பாளர்களில் ஒருவரான ஷாரதா டெர்ரி, மைக்ரோ காட்டன் என்ற பிராண்டின் கீழ் குழந்தைகளுக்கான பெட் ஷீட்கள் மற்றும் டவல்கள் இரண்டையும் அறிமுகப்படுத்தவுள்ளனர். EPCH கையால் செய்யப்பட்ட மர பொம்மைகள் உற்பத்தியாளர்கள், குழந்தைகள் மரச்சாமான்கள் மற்றும் பிற குழந்தை தயாரிப்புகளின் குழுக்களின் பங்கேற்பை ஏற்பாடு செய்துள்ளது. பல வழக்கமான கண்காட்சியாளர்கள் கூட குழந்தைகளுக்கான ஸ்பெஷல் பொருட்களை காட்சிப்படுத்துவார்கள்.

## பெட் & பாத் | வால்பேப்பர் | ப்ளிண்ட்ஸ் | ஏரியா ரக்ஸ் | டெகரேட்டிவ் ஃப்ளோரிங்

# பெருகி வரும் அரசாங்க ஆதரவு



கடந்த பத்தாண்டுகளில், HGH இந்தியா அளவு மற்றும் புகழில் வளர்ச்சியடைந்தது மட்டுமல்லாமல், அதன் கண்காட்சியாளர்கள் மற்றும் பார்வையாளர்களுக்கு தொடர்ந்து நல்ல வணிக வெளிப்பாடுகளை வழங்கியுள்ளது. இன்று, இந்த வர்த்தகக் கண்காட்சி இந்தியாவிலும் உலக அளவிலும் அங்கீகரிக்கப்பட்டுள்ளது, இது இந்தியா முழுவதும் உள்ள 500 நகரங்கள் மற்றும் மாவட்டங்களில் இருந்து 36,000 க்கும் மேற்பட்ட தீவிர டிரேட் பையர்களை கண்காட்சியாளர்களுடன் இணைக்கிறது. HGH இந்தியாவில் உள்ள கண்காட்சியில் நன்கு அறியப்பட்ட சர்வதேச மற்றும் இந்திய பிராண்டுகள், வடிவமைப்பாளர்கள், பெரிய உற்பத்தியாளர்கள், MSME யூனிட்கள், இறக்குமதியாளர்கள் மற்றும் ஏற்றுமதியாளர்கள் பங்கேற்கவுள்ளனர். சந்தையில் முன்னணியில் உள்ள நிறுவனங்கள் மற்றும் சிறந்த இந்திய பிராண்டுகள், கண்டங்கள் எங்கும் உள்ள 32 நாடுகளைச் சேர்ந்த பன்னாட்டு நிறுவனங்கள் வரை HGH இந்தியாவில் தொடர்ந்து பங்கேற்று வருகின்றனர்.

கைவினைப் பொருட்கள், கைத்தறி மற்றும் குடிசைத் துறைகள் HGH இந்தியாவின் மிகப்பெரிய பயனாளிகளில் ஒன்றாக இருந்து இந்திய தேசிய சந்தையில் நெடுங்கால தடத்தினை பதித்து வருகின்றனர். இதுபோன்ற சிறு உற்பத்தியாளர்களில் அதிகமானோர் ஆண்டுதோறும் நன்கு நிறுவப்பட்ட ஆஃப்லைன் மற்றும் ஆன்லைன் ரீடெய்ல் சேல்ஸ் செயினில் இணைந்து வருகின்றனர். இந்தியா முழுவதிலும் உள்ள 550 நகரங்கள் மற்றும் ஊர்களை சேர்ந்த 37,000 தீவிர டிரேட் பையர்களில் 70%க்கும் அதிகமானோர் மூலாதாரம், டிரெண்ட்கள் மற்றும் சந்தைத் தகவல்களுக்காக HGH இந்தியாவை தங்கள் வருடாந்திர காலண்டரின் ஒரு பகுதியாக மாற்றியுள்ளனர். வீட்டு பிரிவில் (ஆஃப்லைன் & ஆன்லைன் ரீடெய்லர்கள் உட்பட) இந்தியாவில் உள்ள முதல் 100 ரீடெய்ல் செயின் நிறுவனங்கள் மற்றும் விநியோகஸ்தர்களில் 95% பேர் HGH இந்தியாவுக்குத் தவறாமல் வருகை தருகின்றனர். HGH இந்தியா பார்வையாளர்களில் 90% க்கும் அதிகமானோர் முடிவெடுக்கும் பதவிகளில் இருப்பவர்களாக உள்ளனர். இது தவிர, சுமார் 28 நாடுகளில் இருந்து வர்த்தகம் செய்பவர்களும், ஆசியா மற்றும் ஆப்பிரிக்காவில் உள்ள முதன்மையாக வளர்ந்து வரும் சந்தைகளும், HGH இந்தியாவுக்குத் தொடர்ந்து வருகை தருகின்றனர், இது வீட்டு ஜவுளி, வீட்டு அலங்காரம், வீட்டுப் பொருட்கள் மற்றும் பரிசுப் பொருட்கள் ஆகிய வகைகளில் இந்திய தயாரிப்புகளுக்கு எல்லை இல்லாத ஏற்றுமதி திறனை உருவாக்குகிறது.

தேசிய மற்றும் சர்வதேச ரீடெய்லர்கள், இறக்குமதியாளர்கள் மற்றும் இன்ஸ்டிடியூஷனல் பையர்ஸ், ஜவுளி அமைச்சகம் மற்றும் இந்திய அரசின் கீழ் உள்ள MSME அமைச்சகம் ஆகியவற்றுடன் சிறு மற்றும் நடுத்தர நிறுவனங்களை இணைக்க HGH இந்தியாவின் வலிமை மற்றும் செயல்திறனை அங்கீகரித்தல்; இந்திய அரசின் ஜவுளி மற்றும் கைத்தறி அமைச்சகத்தின் டெவலப்மென்ட் கமிஷனர், கைவினைப் பொருட்கள் மற்றும் மேம்பாட்டு ஆணையம்; உத்திரப் பிரதேச அரசு, ஹரியானா அரசு HGH இந்தியாவை அங்கீகரித்துள்ளது, இதில் தகுதியான கண்காட்சியாளர்கள் தங்கள் பல்வேறு திட்டங்களின் கீழ் சந்தை மேம்பாட்டு மானியம் பெறலாம் அல்லது மானியத்தை கோரலாம், இது அவர்கள் பங்கேற்பதற்கான செலவைக் குறைக்கிறது.

12 பதிப்புகளுக்கு மேல் காட்சிப்படுத்தி, HGH இந்தியா, வீட்டு ஜவுளி, பர்னிஷிங், வீட்டுச் சாமான்கள், வீட்டு அலங்காரம், வீட்டுப் பொருட்கள் மற்றும் பரிசுப் பொருட்களுக்கான வேகமாக வளர்ந்து வரும் இந்திய சந்தையில் கவனம் செலுத்தும் கண்காட்சியாளர்கள் மற்றும் பார்வையாளர்களுக்கு நம்பகமான தேர்வாகவும் மிகவும் விருப்பமான வர்த்தகக் கண்காட்சியாகவும் தெளிவாக வெளிப்பட்டுள்ளது. தெளிவாக, இந்த வணிகங்களில் உள்ள அனைத்து பங்குதாரர்களும் -அரசு, தனியார் அல்லது சர்வதேச தரப்பினர் என அனைவரும் - HGH இந்தியாவை தங்கள் தளமாக உணர்கின்றனர்!

## 2022/23 டிரெண்டுகள்

HGH இந்தியாவால் கணிக்கப்படும் டிரெண்டுகள் பல ஆண்டுகளாக அதன் கண்காட்சியாளர்கள் மற்றும் பார்வையாளர்களுக்கு மிகவும் பயனுள்ளதாக இருந்து வருகிறது. இந்த பதிப்பில், HGH இந்தியா, முந்தைய ஜூலை 22 பதிப்பில் இருந்து தெரிந்து கொண்டவற்றில் நுகர்வோர் ரசனையில் ஏற்பட்டுள்ள குறுகிய கால மாற்றங்களுக்கு ஏற்ப திருத்தம் மேற்கொண்டு செயல்படும். 2022/23 காலகட்டத்திற்கான புதுமையான தயாரிப்புகளுடன் ஹால் 1 இல் உள்ள புதிய ட்ரெண்ட்ஸ் பெவிலியன் புதிய பல பொருட்களை காட்சிப்படுத்தவுள்ளது, ரீடெய்லர்கள் இதன் மூலம் மிக சிறந்த பலன்களை அனுபவிக்கலாம். கடந்த பதிப்பில் இருந்து மேற்கொள்ளப்பட்ட இந்தப் டிரெண்டுகள், வீட்டுப் பொருட்கள் சந்தையில் சமூக, வாழ்க்கை முறை மற்றும் தொழில்நுட்ப மாற்றங்களின் தாக்கத்தை பிரதிபலிக்கின்றன. ஒவ்வொரு ஆண்டும், HGH இந்தியா வரவிருக்கும் வண்ணங்கள், வடிவமைப்புகள், பொருட்கள் மற்றும் ஸ்டைல்களை கணித்து முன்னறிவிக்கிறது, அவை இந்திய சந்தையில் வீட்டு ஃபேஷன் மற்றும் வாழ்க்கை முறை டிரெண்டுகளில் முக்கிய பங்கு வகிக்கக்கூடும்.

‘விண்ட்ஸ் ஆஃப் சேஞ்ச்‘ - HGH இந்தியாவால் உங்களுக்குக் கொண்டு வரப்பட்ட 2022/23 ஆம் ஆண்டிற்கான டிரெண்டுகள் வலுவாக வளர்ந்து வரும் வண்ணங்கள், வடிவமைப்புகள் மற்றும் பொருட்களின் நன்கு ஆராய்ச்சி செய்யப்பட்ட மிகச் சிறந்த ஒருங்கிணைப்பு ஆகும். வரவிருக்கும் பருவங்களுக்கு ஏற்றவாறு உங்கள் புதிய சேகரிப்புகளை உருவாக்க அல்லது வாங்க இந்த டிரெண்ட்ஸ் புத்தகத்தில் விரிவான விவரங்களை நீங்கள் காணலாம். ஹீலிங் கிரீன், ஈகோ ஆர்ட்டிஸ்ட், பர்பிள் அவென்யூ மற்றும் பீஸ்ஃபுல் ஆம்பர் ஆகிய நான்கு குழுக்களாக இந்திய சந்தைக்கான 2022-23க்கான வடிவமைப்பு பிரிவுகளை இந்த டிரெண்ட்ஸ் விவரிக்கின்றன. 2022/23 ஆண்டிற்க்கான HGH இந்தியாவின் டிரெண்டுகள் அனைத்து வீட்டு வகைகளுக்கும் பொருந்தும்- ஹோம் டெக்ஸ்டைல்ஸ், பர்னிஷிங் ஃபேப்ரிக்ஸ், வீட்டு அலங்காரம், அழகான ஃபர்னிச்சர், வீட்டு உபயோக பொருட்கள் - கிஃப்ட்ஸ்.

### Healing Green
ஹெகலின் கிறீன்



### Eco Artist
ஈக்கோ ஆர்ட்டிஸ்ட்



### Purple Avenue
புறப்பிலே அவனுக்கே



### Peaceful Amber
பேசெபிஉல் அம்பர்

